026-22189

எனது இல.
මගේ අංකය
My No.

உமது இல.
ඔබේ අංකය
Your No.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
வடக்கு - கிழக்கு மாகாணம்
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව
උතුරු - නැගෙනහිර පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT
NORTH - EAST PROVINCE

உட்துறைமுக வீதி,
ඇතුළු වරාය පාර,
Inner Harbour Road,

திருக்கோணமலை.
ත්‍රිකුණාමලය.
Trincomalee, Sri Lanka.

**சுற்றறிக்கை இல.98/02**

03.06.98

யாழ் மாவட்ட ப.நோ.கூ.ச. தலைவர்களுக்கு,

## இடைத்தொடர்பு உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் 25 ப.நோ.கூ.சங்கங்கள் உள்ளன. இவற்றுள் 20 ப.நோ.கூ.சங்கங்கள் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இடப்பெயர்வுகளுக்கு மத்தியிலும் இயல்பாக இயங்கி வருவதை காணக்கூடியதாக உள்ளது. இச்சங்கங்களில் கூட்டுறவுத்துறையில் பல வருடங்களாக ஈடுபாடு கொண்டு அனுபவமும், அறிவும் பெற்ற தலைவர்களும், நெறியாளர்களும் சேவையாற்றி வருகின்றனர். இம்மாவட்டத்திலேயே அனுபவமும் ,தராதரமும், பயிற்சியுமுள்ள மேல் மட்ட கூட்டுறவுப் பணியாளர்களும் பலர் உள்ளனர். இவ்வாறு ப.நோ.கூ.சங்கள் பல்வேறு வளங்களுடனும் ,சுயாதீனமாக இயங்கும் சக்தியுடனும் அமைந்துள்ளன. இதனால் திணைக்களக் கட்டுப்பாடுகளை இலகுவாக்கி ஜனநாயகப் பண்புள்ள கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்கும் செயல்திட்டம் ஒன்றை இம்மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தல் பொருத்தமானது.

இதன் அடிப்படையில் தற்போது நடைமுறையிலுள்ள ப.நோ.கூ.சங்கங்கள் மீதான அபிவிருத்தி மேற்பார்வை சார்பான திணைக்கள கட்டுப்பாடுகளை பன்முகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைகளை தொடர்புபடுத்துவதற்கு ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்தாலும் ஒவ்வொரு பணியாளர் நியமிக்கப்படுவர். இப்பணியாளர் குறிப்பிட்ட சங்கத்திற்கும் கூட்டுறவு உதவி ஆணையாளருக்கும் இடையில் தொடர்பு உத்தியோகத்தராக (Liaison) பணியாற்றுவார்.

1. கீழ்க்கண்ட தகைமைகளையுடைய ஒருவர் இவ்வேலைக்காகச் சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படுவார்..
   1. அனுபவமும் ,செயல்திறனும் மிக்கவரும், சேவை மூப்புடையவருமான ஒருவராயிருத்தல்.
   2. கூட்டுறவு பணியாளர் உயர்தரப் பயிற்சி பெற்றவராய் இருத்தல்.

2. **தொடர்பு உத்தியோகத்தர்களின் பணிகள் பின்வருவனவாக இருக்கும்:**
   1. சங்கத்தின் புதிய முயற்சிகள் தொடர்பான சாத்தியக்கூற்று அறிக்கைகளைத் தயாரித்து அனுமதிகளைத் தாமதமின்றிப் பெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
   2. கடன் விண்ணப்பங்கள் , சொத்துக் கொள்வனவுகளுக்கான மதுக்கள் ஆகியவற்றை உரிய முறையில் தயாரித்து அனுமதிகளைப் பெற நடவடிக்கை எடுத்தல்.
   3. புள்ளிவிபரங்கள் கணக்கறிக்கைகளை சரியாக தாமதமின்றி சமர்ப்பித்து தொடர்புபடுத்தல்.
   4. சங்க ஆளணி தொடர்பாக மீளாய்வுகளை செய்வதற்கான அறிக்கைகளை சமர்ப்பித்தலும் தொடர்புபடுத்தலும்.

5. பொதுக்கூட்டம் , நெறியாளர் குழுக்கூட்டத் தீர்மானங்களுக்கமைவாக அனுமதிகளை பெறுவதற்கான பத்திரங்களை சமர்பித்தலும் , தொடர்புபடுத்தலும்.

6. இவை போன்ற ஏனைய பொருத்தமான தொடர்பு நடவடிக்கைகளில் ஈடுபடல்.

இவ்விதமான பதவி ஒன்று ப.நோ.கூ.சங்கங்களில் ஆளணிப்பட்டியலில் தற்பொழுது இல்லை. எனவே தற்பொழுது செயலாளர் பதவியினையுடைய சங்கங்கள், அவரை இடைத்தொடர்பு உத்தியோகத்தராகவும் நியமித்துக் கொள்ளலாம். அவ்வாறு இல்லாவிடில் சங்கங்கள் செயலாளர் பதவி ஒன்றினை ஆளணியில் உருவாக்கி அதற்கான எனது அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இச் செயலாளர் பதவி 114.7 அல்லது 114.8 தரத்தினதாகவும் புதிய சுற்றுநிருபப் படி 9ம் அல்லது 10ம் சம்பளத்திட்டத்தை உடையதாகவும் இருக்கும்.

இவ்வாறு தொடர்பு உத்தியோகத்தர் ஒருவர் சங்கங்களால் நியமிக்கப்பட்டதும் ப.நோ.கூ.சங்கங்களுடனான திணைக்கள உத்தியோகத்தரது வேலைப்பழு குறைவடையும் . அவர்கள் வேறு பிரதான வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதற்கும் ,அவர்களிடமிருந்து உச்சப்பயன்பாட்டை பெறுவதற்கும் இயலும் . யாழ்ப்பாண மாவட்டம் ஆறு (06) வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்திற்கும் சிரேஷ்ட கூட்டுறவுப் பரிசோதகர் ஒருவர் பொறுப்பாக நியமிக்கப்படுவார். ப.நோ.கூ.சங்கங்களின் இடைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் இச்சிரேஷ்ட கூட்டுறவுப் பரிசோதகரின் வழிகாட்டுதலின் கீழ் சங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் மேம்பாட்டிற்கு உதவுவார்.

இத்திட்டம் சிறந்த முறையில் செயற்படுத்தப்படும் பொழுது கூட்டுறவுக் கொள்கைகளின் அடிப்படையிலான சுயாதீனமாக இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க முடியும். எனவே இவ்விடயத்தில் உங்களது ஒத்துழைப்பு பெரிதும் வேண்டப்படுகிறது.

**க.சண்முகலிங்கம்,**

**கூ.அ.ஆணையாளரும்,**

**கூ.ச.பதிவாளரும்(வகி).**